# இளையவன்

இளைஞர்களுக்கான இனிய மாத இதழ்

ஆண்டு-6 ★ முறுவல்-13 ★ ஏப்ரல்- 2009 ★ பங்குனி



## அமரர் லட்சுமி ரமணா

தனிச்சுற்று ★ இலக்கியச்சாரலின் அதிகாரபூர்வ ஏடு

நன்கொடை விலை : ரூ. 5/-

# இலக்கியச்சாரல்

11/6, தானப்பன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

**அமரர் லட்சுமி ரமணா நினைவு கலை அறிவியல் இளம் சாதனையாளர் விருது**
**பெறுபவர் : செல்வி. காம்கோர். கே. புவனேஸ்வரி**

## தகவுரை



உலக நாடுகளைக் கணினி என்னும் மூன்று எழுத்துச் சொல் கட்டிப் போட்டிருக்கிறது. இணைய தளங்கள் தகவல் துறையை எளிதாக்கி விட்டதால்... இன்று உலகம் சுருங்கிக் கொண்டிருக்கிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டங்களைக் கூட அண்டை வீடுகளாக்கும் அதிசயத்தை மென்பொருள் துறை சாதித்து வருகிறது.

உலக வாழ்வியலை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மென்பொருள் நிறுவனத் துறையில் கடந்த 17 ஆண்டுகளாக **செல்வி. கே. புவனேஸ்வரி,** சத்தமில்லாமல் சாதனையை நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார்.

காம்கோர் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் மென்பொருள் நிறுவனத் தலைவராக, வல்லுனராக, வரை கலைஞராக, தயாரிப்பாளராக... குறும் படங்களை இயக்குபவராக சமூக ஆர்வலராக, எழுத்தாளராக இன்னும் பதிப்பாளராக இப்படி பன்முக ஆற்றலோடு பவனி வருகிறார்... இவர்!

'அன்புள்ள அப்பா அம்மாவுக்கு' என்ற இவரது குறும்படம் சமுதாயக் கண்ணோட்டத்தில் மகத்தான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது...

இளைய எழுச்சியை எப்போதும் போற்றி வளர்ப்பதில் இணையற்ற ஆர்வத்துடன் முன்னிற்கும் 'இலக்கியச்சாரல்' அமைப்பு, இந்த ஆண்டு அமரர் லட்சுமிரமணா நினைவு கலை அறிவியல் இளம் சாதனையாளர் விருதினை, செல்வி கே. புவனேஸ்வரி அவர்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகிறது.

அன்புடன்
கவிமாமணி இளையவன்
நிறுவனர் / தலைவர்
இலக்கியச்சாரல்